[திரு. ரா. கிருஷ்ணன்] [1982 மார்ச் 9

தீர்வை போட்டு வசூல் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த முயற்சியைத் தடுக்கின்ற வகையில் தமிழக அரசாங்கம் மூலமாகத்தேசிய வளர்ச்சிக் கூட்டத்தில் முதலமைச்சர்கள் மாநாட்டில் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது உண்மை. வோட்டெடுப்பு நடந்தது. அந்த ஓட்டெடுப்பில் இந்த அரசாங்கம் கலந்து கொள்ளவில்லை. இது சம்பந்தமாக இங்கே திரு. உமாநாத் அவர்கள் கேட்டார்கள். நிதியமைச்சர் அவர்கள் வோட்டெடுப்புபற்றி தகவல் இல்லை என்று பொத்தாம் பொதுவாகக் கூறிவிட்டார்கள். எதிர்ப்பு தெரிவித்ததையெல்லாம் சொன்னார்கள். ஆனால் ஓட்டெடுப்பிலே கலந்துகொண்டீர்களா இல்லையா என்று கேட்டால் தெரியவில்லை என்று சொல்கிறார்கள். மாநில அரசுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்பது இந்த ஆளுங்கட்சியின் கொள்கை. அதற்கு நேர்மாறாக அதற்கு வேட்டு வைக்கக்கூடிய முறையிலே மத்திய அரசாங்கத்தின் கொள்கை, இந்த அரசாங்கம் அந்த ஓட்டெடுப்பில் கலந்துகொள்ளாதது சரிதானா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மண்ணெண்ணெய்க்கு 8 சதவீதமாக இருந்த வரியை 4 சதவீதமாகக் குறைத்திருப்பது பாராட்டுக்குரியது. ஏழைகள் அதைப் பயன்படுத்துகிறார்கள் என்பதால் அந்த 4 சதவீதத்தையும் ரத்து செய்யவேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை.

பிஸ்கட், மிட்டாய் போன்றவற்றிற்கு வரியை உயர்த்தியிருக்கிறீர்கள். காட்பரீஸ், பிரிட்டானியா போன்ற பிஸ்கட் கம்பெனிகள்மீது போடுகிற வரி அல்ல, அந்தப் பொருட்கள் மீது போடப்படுவதால் வாங்கும் மக்கள்மீது போடுவதாகத்தான் ஆகிறது. ஆகவே பிஸ்கட், மிட்டாய் போன்றவற்றிற்கு உள்ள வரியை ரத்து செய்யவேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை. தலைச்சுமை வியாபாரிகளுக்கு — ஹாக்கர்ஸ்க்கு — ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய்க்குமேல் விற்பனை இருந்தால் வரி என்று சொல்லியிருக்கிறார்கள்.

ALONE TRIUMPHS

6. தகவல் கோரல்

சென்னை விமான நிலையத்தின் முன் ஏற்பட்ட கலவரம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் டெல்லியில் பாராளுமன்ற மாநிலங்கள் அவையில் உறுப்பினர் பதவி ஏற்றுக்கொண்டு விமான நிலையத்திற்கு வந்திருக்கின்ற நடிகர் திலகம் அவர்களின் வரவேற்பின்போது காவல் துறையினர் கூடியிருந்த கூட்டத்தினர் மீது தடியடிப்பிரயோகம், கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்து அங்கே அமளி ஏற்பட்டிருப்பதாகத் தெரி

கிறது. நம்முடைய உறுப்பினர் திரு. ராஜசேகரன் அவர்கள் படுகாயமுற்றதாக எங்களுக்குச் செய்தி வந்திருக்கிறது. அது சம்பந்தமாக செய்தி அரசுக்குக் கிடைத்து இருக்கிறதா ? ஒரு விளக்கமான செய்தியை மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பார்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதுபற்றிய விவரம் ஒன்றும் தற்போது என்னிடத்தில் இல்லை.

5 வரவு-செலவுத் திட்டம் 1982-83 பொதுவாக்கெடுப்பு—தொடர்ச்சி.

திரு. ரா. கிருஷ்ணன் : ஒரு நாளைக்கு அவர்களுக்கு 35 ரூபாய் விற்பனை என்று வைத்துக்கொண்டாலும்கூட ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் வந்துவிடுகிறது.

ஆகவே, அந்த டர்ன் ஓவரைப் பொறுத்தவரையில் கூடுதலாக ஆக்க வேண்டும். அவர்கள் தலைச் சுமை வியாபாரிகள். அந்த அடிப்படையில் பரிசீலனை செய்து அந்தத் தொகையைக் கூட்டித் தர வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை.

சோடாவிற்கு வரி 5 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் கூட்டப்பட்டிருக்கிறது. சோடா லக்சுரி பொருள் அல்ல. பெட்ரோலுக்கு வரி 5 சதவீத்திலிருந்து 11 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. டீசலுக்கு வரி 9 சதவீதத்திலிருந்து 11 சதவீதமாகக் கூட்டப்பட்டிருக்கிறது. மேலும் டயர், டியூப் போன்றவைகளுக்கும் வரி போடுவதானது சாதாரண ஏழை எளிய மக்களின் மீது போடப்படும் வரியாகும். இந்த வரி விதிப்பானது விவசாயிகளைத்தான் ஏற்றும். இதனால் பொது மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நோட்டுப் புத்தகங்கள், கணக்குப் புத்தகங்கள், பேனா, பிளாஸ்டிக் பொருள்கள், மெழுகுவர்த்தி ஆகியவைகளுக்கு இருந்த ஒருமுனை விற்பனை வரியை பலமுனை விற்பனை வரியாகச் செய்யப் போவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் நோட்டுப் புத்தகங்கள், பேனா போன்றவைகளெல்லாம் எல்லாப் பகுதியினராலும், குறிப்பாக ஏழை எளிய மக்களால் வாங்கப்படும் பொருட்களாக இருப்பதால் இதையும் மறு பரிசீலனை செய்யும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.